## மாகாணக்கல்வித் திணைக்களம் வடக்கு மாகாணம்

### கல்விப்பொதுத் தராதரப் பத்திர (சாதாரணதர) நிலையறி பரீட்சை – 2021

| தமிழ்மொழியும் இலக்கியமும்<br>தரம் 11 | 22 | T | II | மூன்று மணித்தியாலம் |
|---|---|---|---|---|

கவனிக்க (1) எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக. விடைகளை தெளிவான கையெழுத்தில் எழுதுக.
(2) இவ்வினாத்தாளுக்குரிய புள்ளிகள் 80 ஆகும்

**1.பின்வரும் வினாக்களுக்குச் சுருக்கமான விடை தருக**

I. அவை நம் உள்ளத்தே கலந்து நம்மை ஆட்கொண்டு நிற்கின்றன. இதனை ஒருமை வாக்கியமாக மாற்றி எழுதுக.

II. பின்வரும் வாக்கியத்திற்குப் பொருத்தமான நிறுத்தக் குறிகளை இட்டு மீண்டும் திருத்தமாக எழுதுக.
கோவிக்காதே கோவிக்காதே என்று சொல்லி அதை சமாளிப்பான்

III. பின்வரும் தொடரைச் சந்திபிரித்து எழுதுக.
ஒருவற்கிருக்க நிழலாகாதே

IV. நாடகம் பார்ப்போரின் கோணத்திருந்து அது படமாக்கப்பட்டது.

இச் செயப்பாட்டு வினை வாக்கியத்தை செய்வினை வாக்கியமாகத் தருக.

V. தங்கச்சி தன்பிஞ்சு விரலால் மூத்தம்மாவின் நெற்றியை வருடியது. இங்கு இடம்பெற்ற வழுவைக் குறிப்பிட்டு மீண்டும் திருத்தமாக எழுதுக.

VI. பின்வரும் வாக்கியத்திலுள்ள எழுத்துப் பிழையுள்ள சொற்களை இனங்கண்டு மீண்டும் திருத்தமாக எழுதுக.
அந்த வலியை மாற்றாமல் தமது பிராத்தம் என்று கருதி அதை அனுபவித்துக் கொண்டு வந்தார்.

VII. அரிச்சந்திர மன்னனின் தியாக வாழ்க்கை பசுமரத்து ஆணி போல பதிந்து விடுகிறது. இங்கு இடம்பெற்ற எழுவாய் பயனிலைகளைக் குறிப்பிடுக.

VIII. வானத்தைப் பாத்து மச்சி வாடுவது என்னத்திற்கோ. பேச்சு வழக்கிலுள்ள இவ்வாக்கியத்தை எழுத்து வழக்கில் எழுதுக.

IX. பரதன் கோசலையை அறிமுகம் செய்தான் இச்செய்வினை வாக்கியத்தை செயப்பாட்டு வினை வாக்கியமாக்குக.

X. பின்வரும் வாக்கியத்தை மயக்கம் நீக்கி மீண்டும் திருத்தமாக எழுதுக.
எல்லோருக்கும் அவசரமாகச் செய்வதற்கு கன வேலை இருந்தது.

**( 20 புள்ளிகள்)**

**02)பின்வருவனவற்றுள் ஒன்றைத் தெரிவு செய்து ஏறத்தாழ 250 சொற்களில் அமையுமாறு விடை எழுதுக. நீங்கள் தெரிவு செய்த விடயத்துக்குப் பொருத்தமான தலையங்கம் இடுக.**

I. பல்லின மக்களையும் கொண்ட எமது நாட்டில் மக்கள் ஒருவரை ஒருவர் புரிந்து கொள்வதற்கும் அவர்களது பண்பாடுகளை அறிந்து கொள்வதற்கும் நூல்களில் காணப்படுகின்ற சான்றாதாரங்களை முதலில் விளங்கிக் கொள்ளுதல் வேண்டும். அவற்றையெல்லாம் வாசித்து அறிந்து கொள்வதற்குரிய சந்தர்ப்பங்கள் பல இன்று காணப்படுகின்றன.ஆனால், வாசிப்பின் வழியே அனைவரையும் வழிப்படுத்தக் கூடிய சூழ்நிலையை இன்றைய எமது சமூகம் கொண்டிருக்கவில்லை. எனவே வாசிப்பின் அவசியத்தை வலியுறுத்தி ஒரு **கட்டுரை.**

II. மக்களின் தேவைகளை நிறைவேற்றுவதில் பெரும் பங்கு வகிப்பதில் வாகனப் போக்குவரத்து பிதான இடத்தை வகிக்கின்றது. இவற்றில் தனி மனிதரொருவர் விரைவாகப் போவதற்றும், குடும்பத்துடன் பயணிப்பதற்கும் சில போக்குவரத்து சாதனங்கள் பயனளிக்கின்றன. கிட்டத்தட்ட போக்குவரத்தால் நன்மைகளே அதிகம் காணப்படுகின்றன எனக்கருதும் ஒருவருக்கும் பொதுமக்களுக்குத் தீமைகளே இடம்பெறுகின்றனஎனக்கருதும் மற்றொருவருக்கும் இடையிலான ஓர் **உரையாடல்.**

III. மனித உடல் தூய்மையையே விரும்புகின்றது. மனிதன் தனது தேவைகளை தூய்மையாக வாழ்வதை அடிப்படையாகக் கொண்டே வாழ்ந்தான். தானும் தான் வாழ்ந்து வரும் இருப்பிடத்தையும் தூய்மையாக வைத்திருப்பதற்கு மஞ்சள், பெருங்காயம் முதலியனவற்றோடு தன்னைச் சூழ்ந்துள்ள மூலிகைகளையும் வாழ்விற்கு அடிப்படையாகக் கொண்டான். நம்முன்னோர்சுத்தமாக வாழ்ந்த முறையையும், சுத்தமாக வாழவேண்டியதன் அவசியத்தையும் இளந்தலைமுறையினருக்கு எடுத்துக் கூறும் வகையில் ஒரு **மேடைப் பேச்சு.**

IV. வகுப்பறையில் கற்றலில் ஆர்வம் காட்டுபவன் சுபகீதன். ஆனாலும் கற்பித்தலின் போது ஆசிரியர் எதிர்கொள்ளும் இடையூறுகளுக்கு வகுப்பறையிலுள்ள கற்பித்தல் சாதனங்களே தடையாக அமைகின்றது எனக்கருதி இதற்கு விடைகாணும் வகையில் கடும் முயற்சியில் ஈடுபட்டான் அதனால் பல ஆசிரிய சமூகத்தினர் நன்மை பெற்றனர் அவனும் வாழ்வில் பல திருப்பங்களை எய்தினான் என்ற கருத்துப்புலப்பட ஒரு **சிறுகதை.**

**( 25 புள்ளிகள்)**

**03..பின்வரும் உரைப்பகுதியின் சுருக்கத்தை 40 – 45 சொற்களில் அமையக்கூடியவாறு எழுதுக (சொற்களின் எண்ணிக்கையைக் குறிப்பிடுக)**

ஒரு மொழி மற்றொரு மொழியுடன் தொடர்பு கொள்ளும் போது ஒரு மொழியிலுள்ள சொற்கள் மற்றொரு மொழியிற் கலத்தல் இயல்பாகும். மொழித்தொடர்பு என்பது மொழி வரலாற்றில் தவிர்க்க முடியாத ஒன்றாகும். தேவைக்கேற்ப பிற மொழிகளில் இருந்து சொற்கள் பெற்றுக் கொள்ளப்படுகின்றன. நம்மிடம் இல்லாத புதிய பொருள்களைப் பயன்படுத்தும் போது அப்பொருள்களுக்குரிய பிறமொழிச் சொற்களையும் பயன்படுத்துகின்றோம்.

வரலாற்று ரீதியாக நோக்கும் போது தமிழோடு மிக நெருங்கிய தொடர்பு கொண்ட பிறமொழி வடமொழியாகும். இலக்கிய வழக்கிலும் பேச்சு வழக்கிலும் தமிழில் உள்ள சொற்களில் கணிசமானவை வடமொழிச் சொற்களாகும். தமிழ்மொழியில் இலக்கியங்கள் தோன்றிய காலந்தொட்டு வடசொற்களும் கலந்து வந்துள்ளன. நூல்களில் கூறப்பட்டுள்ள விடயங்களில் பல வடமொழி விடயங்களாக உள்ளன. கம்பர் இராம கதையை வடமொழியிலிருந்தே பெற்றார். திருக்குறளில் கூறப்பட்டுள்ள கருத்துக்கள் பல வடமொழி நூல்களில் இருந்து பெறப்பட்டன.

சங்ககாலத்தில் எழுந்த இலக்கியங்களில் வடமொழிச் சொற்கள் இடம்பெற்றுள்ளன. கலித்தொகை, பரிபாடல் என்பவற்றில் வடசொற்கள் பல இடம்பெற்றுள்ளன. இவற்றின் பின்தோன்றிய கீழ்க்கணக்கு நூல்களிலும் சிலப்பதிகாரம், மணிமேகலை என்னும் காவியங்களிலும் வடசொற் கலப்பு சங்க நூல்களிலுள்ளதைப் பார்க்கிலும் பல மடங்கு கூடுதலாக உள்ளது.

**( 10 புள்ளிகள்)**

**04..பின்வரும் பந்தியை வாசித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடைதருக**

நவீன கவிதையின் தோற்றம் பற்றி நோக்குவது நாவல், சிறுகதை என்பனவற்றின் தோற்றம் பற்றி நோக்குவதை விடச் சிக்கலானதொன்று. ஏனெனில், தமிழ்க்கவிதை முற்றிலும் புதிய வடிவமன்று. ஏறத்தாழ இரண்டாயிரமாண்டுக் காலப்பாரம்பரிய வரலாற்றைக் கொண்டிருக்கிறன்றது. இவ்வாறான தமிழ்க்கவிதை இருபதாம் நூற்றாண்டில் நவீன கவிதைக்குரிய பண்புகளைக் கொண்டமை கண்கூடு. இத்தகைய நவீன தன்மைகள், உள்ளடக்கம், உருவம், வெளிப்பாட்டு முறை என்பன சார்ந்தவையாய் உள்ளமை நாமறிந்ததே. இவ்வாறு நோக்கும் போது எழுகின்ற சிக்கலொன்றுண்டு. இன்னொரு விதமாகக் கூறின், உள்ளடக்க நோக்கில் ஈழத்துக் கவிதை பத்தொன்பதாம் நூற்றாண்டிலேயே நவீன பண்பு கொண்டதாக உருவாகிவிடுகின்றது. இவ்வாறான நவீன கவிதைக்கான ஆரம்பகால முயற்சிகளை நவீன கவிதைக்கான ஊற்றுக்கள் என்று கூறுவது பொருத்தமானது. மேற்கூறியவாறான நவீன கவிதை ஊற்றுக்கள் சிலவற்றுள் தி.த.சரவணமுத்துப்பிள்ளையின் ‘தத்தை விடுதூது’ (1892) என்ற படைப்பாக்க முயற்சி விதந்துரைக்கப்பட வேண்டியதொன்று. பத்தொன்பதாம் நூற்றாண்டுப் பெண்கள் நிலை பற்றி அவர்களுக்கு நடைபெறும் பொருந்தா மணம் பற்றி பல்வேறு கோணங்களில் நன்கு சிந்தித்துப் பாடல்கள் புனைந்துள்ளார் அவர். பாரதியாரின் பெண்விடுதலைக்கு முன்பே அதற்கு நிகரான பாடல்களை சரவணமுத்துப்பிள்ளை புனைந்துள்ளார் என்று கூறுவதில் தவறில்லை.

i) இப்பந்தியில் சிக்கலான விடயமென குறிப்பிடப்படுவது யாது?

ii) இருபதாம் நூற்றாண்டின் நவீன கவிதைக்குரிய பண்புகள் எவை?

iii)நவீன கவிதைக்குரிய பண்புகள் 19 ஆம் நூற்றாண்டில் தோற்றம் பெற்றது என்பதற்குத்தரும் ஆதாரம் யாது?

iv)தத்தை விடுதூது என்ற கவிதை நூலின் சிறப்பு யாது?

v)பாரதியாரை விட தி.த.சரவணமுத்துப்பிள்ளை போற்றப்படக் காரணம் என்ன?

**( 10புள்ளிகள்)**

**05**.நீண்ட காலமாகக் கைவிடப்பட்ட குளம் ஒன்றினைத் திருத்துவதற்கான முடிவு குளக் கோட்டை அபிவிருத்திச் சங்கத் தலைவரினால் எடுக்கப்பட்து. அபிவிருத்திச் சங்கத் தலைவர் த.அபிராம் என உம்மைக் கருதிக்கொண்டு, அபிவிருத்திச் சங்கத்தினரால் எடுக்கப்பட்ட முடிவுகளைப் பத்திரிகையில் வெளிப்படுத்த வேண்டுமென விநயமாகக் கேட்கும் வகையில் காலைக்கானம் பத்திரிகை ஆசிரியருக்கு 100 சொற்களில் கடிதம் ஒன்று எழுதுக

- விவசாயத்தினை மேற்கொள்வதற்கு இந்தக் குளம் மட்டுமே மக்களுக்குப் பயன்பாடாக இருக்கின்றது
- மக்களுக்குக் குளம் பல்வேறு வழிகளிலும் பயன்பட்டமை
- குளத்தைப் புனரமைக்க மக்களும் இளைஞர்களும் மேற்கொண்ட முயற்சியைப் பாராட்டுதல்

**அல்லது**

தனிமனித பாதுகாப்பு என்பது தனிமனிதனோடு மட்டும் நின்று விடுவதில்லை. சூழலையும் கருத்தில் கொள்ள வேண்டியதாகின்றது. தாம்வாழும் சூழலில் கால்வாய்கள் சுத்தமாகப் பேணப்படவேண்டுமென்பதை மனிதர்கள் ஒவ்வொருவரும் அறிவர். கால்வாயைச் சுத்தமாக வைத்திருக்க வேண்டுமென்பதன் அவசியத்தை வலியுறுத்தி தொன்னூர் இளைஞர் கழகத்தின் சார்பில் 100 சொற்களில் ஒரு விழிப்புணர்வுத் **துண்டுப்பிரசுரம்** எழுதுக

- கால்வாயின் ஓரங்களைச் சுத்தமாக வைத்திருத்தல்
- நீர்தேங்கும் தன்மையை நீக்கிவிடுதல்
- தேவையற்ற கழிவுப்பொருட்கள் கால்வாயினுள் சேர்வதைத் தடுத்தல்

**( 15 புள்ளிகள்)**